Chapter *XXIII Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.469/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 7 |
| | | Defence | |
| Name | | முருகன் | |
| Father's Name | : | காத்தகுட்டி | |
| Village | : | மஞ்சங்குளம் | |
| Taluk | : | நாங்குனேரி | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 52 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 29th day of June 2026.

(2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி சிறையில் உள்ளார். அவரது தரப்பில் வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் மஞ்சங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சுடலைக்கண்ணன் என்பவரை எனக்கு தெரியும். எதிரி ஆறுமுகம் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் எதிரி ஆறுமுகம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் காணப்படும் கையெழுத்து என்னுடையது அல்ல. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என் முன்பு போலிசார் யாரையும்

கைது செய்து விசாரித்து வாக்குமூலம் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

கடந்த 13.07.2018 ஆம் தேதி அதிகாலை 4 ,00 மணிக்கு நானும் சுடலை கண்ணன் என்பவரும் பெருவேம்புடையார் சாஸ்தா கோவில் அருகே உள்ள சிறுமளஞ்சி செல்லும் ரோட்டில் நின்று கொண்டிருக்கும் போது அங்கு வந்த நாங்குனேரி காவல் ஆய்வாளர் எதிரி ஆறுமுகத்தை கைது செய்து எங்கள் முன்பு விசாரிக்க எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சூரன்குடிக்கு மேற்கே உள்ள வடுகச்சி மதில் ஊருக்கு செல்லும் தார் ரோட்டில் கீழ்ப்புறம் உள்ள முள்புதரில் மறைத்து வைத்திருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாளையும், சம்பவத்தின் போது அவர் அணிந்திருந்த ரத்தக்கறை படிந்த சாரம் சட்டை ஆகியவற்றை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் எங்கள் முன்பு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் அத்தாட்சியிலும் அந்தந்த இடங்களில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து

உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை

Chapter X*XIII Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.469/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 8 |
| | | Defence | |
| Name | | சுடலைக்கண்ணன் | |
| Father's Name | : | வானுமாமலை | |
| Village | : | மஞ்சங்குளம் | |
| Taluk | : | நாங்குனேரி | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 33 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 29th day of June 2026.

(2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி சிறையில் உள்ளார். அவரது தரப்பில் வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் மஞ்சங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி முருகன் என்பவரை எனக்கு தெரியும். எதிரி ஆறுமுகம் என்பவை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் எதிரி ஆறுமுகம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் காணப்படும் கையெழுத்து என்னுடையது அல்ல. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என் முன்பு போலிசார் யாரையும் கைது

செய்து விசாரித்து வாக்குமூலம் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

கடந்த 13.07.2018 ஆம் தேதி அதிகாலை 4 ,00 மணிக்கு நானும் முருகனும் பெருவேம்புடையார் சாஸ்தா கோவில் அருகே உள்ள சிறுமளஞ்சி செல்லும் ரோட்டில் நின்று கொண்டிருக்கும் போது அங்கு வந்த நாங்குனேரி காவல் ஆய்வாளர் எதிரி ஆறுமுகத்தை கைது செய்து எங்கள் முன்பு விசாரிக்க எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சூரன்குடிக்கு மேற்கே உள்ள வடுகச்சி மதில் ஊருக்கு செல்லும் தார் ரோட்டில் கீழ்ப்புறம் உள்ள முள்புதரில் மறைத்து வைத்திருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாளையும், சம்பவத்தின் போது அவர் அணிந்திருந்த ரத்தக்கறை படிந்த சாரம் சட்டை ஆகியவற்றை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் எங்கள் முன்பு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் அத்தாட்சியிலும் அந்தந்த இடங்களில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை